Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 24 | இதழ் 102

## ‘எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் தரையிலேயேதான் ஊர்ந்துகொண்டு இருக்கிறாரா? தலையைக் கொஞ்சம் தூக்கிப் பாருங்கள் பழனிசாமி அவர்களே... தமிழ்நாடு மாறிக் கொண்டிருக்கிறது!’

## ‘பழனிசாமியின் ஆட்சியில் தமிழ்நாட்டு நலன்களும் உரிமைகளும் பா.ஜ.க.விடம் அடகு வைத்துக் காவு கொடுக்கப்பட்டதுதான் வரலாறு!’ - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்




சென்னை, 24 அக்டோபர் 2023: கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், இன்று (22-10-2023) திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

நாடாளுமன்றக் களம் நமக்காக காத்திருக்கிறது. வெற்றிக் கனியைப் பறிக்க, அந்தத் தேர்தல் பணிக்கான தொடக்கப்புள்ளியான வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தை நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம். மத்திய மண்டல மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்கள் கூட்டம் திருச்சியிலும் - தென் மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் இராமநாதபுரத்திலும் - மேற்கு மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் திருப்பூரிலும் நடந்தது. இப்போது உங்களுடைய முகங்களை பார்ப்பதற்காகவே இந்த வடக்கு மண்டல மாநாட்டிற்கு கழகத்தின் கோட்டையாக விளங்கும் திருவண்ணாமலைக்கு நான் வந்திருக்கிறேன்.

ஒளி மிகுந்த ஊரில் உங்கள் முகங்களில் எல்லாம் உதயசூரியனின் ஒளியை பார்க்கிறேன். தினமும் காலையில் சூரிய ஒளியை பார்க்கும்போது என்ன மாதிரியான உற்சாகம் ஏற்படுமோ, அதே மாதிரியான உற்சாகம்தான் உங்களை பார்க்கும்போதும் ஏற்படுகிறது! உற்சாகம் என்று சொல்வதைவிடப் புதியதொரு உணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படுகிறது என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்! ஒரு நாள் முழுவதும் - ஒரு வாரம் முழுவதும் - ஓய்வில்லாமல் உழைத்தாலும், அடுத்த நாள் கழக உடன்பிறப்புகளின் இருக்கப்போகிறோம் என்ற எண்ணம் வந்துவிட்டாலே புதிதாக ஒரு எனர்ஜி வந்துவிடும். ஏன் என்றால், நீங்கள்தான் ”சீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி!” இந்தப் பாசப்பிணைப்பை ‘உடன்பிறப்பேஞ்’ என்ற ஒரே ஒரு சொல் மூலமாக உருவாக்கிக் கொடுத்தவர் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

திருவண்ணாமலையும் தீபமும் போலதான், திருவண்ணாமலையும் தி.மு.க.வும்! யாராலும் பிரிக்க முடியாது! பல்வேறு வரலாற்றை நம்மடைய பொதுச் செயலாளர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, இரண்டை மட்டும் உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய கழகம் உருவான அன்று நடந்த முதல் பொதுக்கூட்டத்தில் 1,451 ரூபாய் வசூலானது. அதில் 100 ரூபாய் இதே திருவண்ணாமலையை சேர்ந்த நம்முடைய அன்புக்கும் மரியாதைக்கும் உரிய ப.உ.சண்முகம் அவர்கள் வழங்கியது. 1957 தேர்தலில் நாம் முதன்முதலாக போட்டியிட்டு 15 பேர் வெற்றி பெற்றோம். அதில், 3 பேர் இந்த மாவட்டத்துக்காரர்கள்! முதல் நாடாளுமன்றத் தேர்தலில் 2 பேர் வெற்றி பெற்றார்கள். அதில் ஒன்று, இந்த திருவண்ணாமலை தொகுதி! சட்டமன்றத்துக்கு, ப.உ.சண்முகம், பி.எஸ்.சந்தானம், களம்பூர் அண்ணாமலை! நாடாளுமன்றத்திற்கு, இரா.தர்மலிங்கம்! இன்றைக்கும் இவர்கள் பெயரை வரலாறு சொல்லிக் கொண்டு இருக்கிறது! அப்படிப்பட்ட நம்முடைய ப.உ.ச. அவர்களுக்கும் இரா.தர்மலிங்கம் அவர்களுக்கும் கொஞ்சம் நாட்களுக்கு முன்புதான் நம்முடைய வேலு அவர்களின் சீரிய முயற்சியில் மாவட்டக் கழகம் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடியது!

அண்ணன் துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல, 1963-இல் தி.மு.க.விற்கு திருப்புமுனை தந்தது திருவண்ணாமலை இடைத்தேர்தல்! அப்போது ஆளுங்கட்சி, காங்கிரஸ்! நம்முடைய வேட்பாளர், ப.உ.ச. அவர்கள்! தேர்தல் பொறுப்பாளர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! அன்றைக்கு திருவண்ணாமலை கொடுத்த வெற்றிதான், 1967-இல் நாம் ஆட்சி அமைக்க அடித்தளமாக அமைந்தது!

அதேபோல், 2021 தேர்தலின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தது, வரவேற்புரை ஆற்றுகிறபோது வேலு அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார், ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ பயணத்தையும் இதே திருவண்ணாமலையில் இருந்துதான் நான் தொடங்கினேன். தொகுதி தொகுதியாகச் சென்று கோரிக்கை மனுக்களை வாங்கினேன். “உங்கள் கவலைகளை, கோரிக்கைகளை, எதிர்பார்ப்புகளை என்னிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள். ஆட்சி அமைந்ததும் 100 நாட்களில் தீர்வு காண்பேன்” என்று சொன்னேன். ஸ்டாலினிடம் மனு கொடுத்தால் நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு, இலட்சக்கணக்கான மக்கள் மனு கொடுத்தார்கள். அந்த அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் வெள்ளம்போல் மக்கள் திரண்டார்கள். அன்றைக்கு வெற்றித் தீபத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் பெறுவதற்கு அடித்தளம் அமைத்தது, திருவண்ணாமலை தான் என்பதை பெருமையோடு குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்!

இந்த பாக முகவர்களின் வடக்கு மண்டல மாநாட்டை எழுச்சியோடும் ஏற்றத்தோடும் அருணாசலம் நகரில் இருக்கும் கலைஞர் பெயரால் அமைந்த திடலில் நடத்திக் காட்டியிருக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய எ.வ.வேலு அவர்களுக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ”எதையும், யாரும் ஏவாமலேயே செய்யக் கூடியவர் வேலு” என்று தலைவர் கலைஞர் அவர்கள் பாராட்டினார். திருவாரூரில் கலைஞர் கோட்டம் - மதுரையில் கலைஞர் நூலகம் - சென்னையில் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனை - இதெல்லாம் எவ்வாறு அமைய வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அதே மாதிரி, அழகோடும் கம்பீரத்தோடும் அமைத்தவர்தான் நம்முடைய அன்புக்குரிய வேலு அவர்கள்! கழகத்தின் ‘விழா வேந்தன்’ என்றால் அது, வேலுதான் என்று திருவண்ணாமலை கலைஞர் சிலை திறப்பு விழாவில் நான் சொன்னேன். அப்படிப்பட்ட அவரோடு தோளோடு தோள் நின்று பணியாற்றும் ஒருங்கிணைந்த திருவண்ணாமலை மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு தலைமைக் கழகத்தின் சார்பிலும் - என்னுடைய முறையிலும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மார்ச் 22-ஆம் நாள் அண்ணா அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடந்தது. அதில் இருந்தே நாம் தேர்தல் பணிகளை நாம் தொடங்கிவிட்டோம். தமிழ்நாடு முழுவதும் பூத் கமிட்டிகளை அமைத்திருக்கிறோம். இதோடு நான்கு வாக்குச் சாவடி முகவர்கள் மாநாட்டை நடத்தியிருக்கிறோம். இன்னும் சென்னை மண்டலம் மட்டும்தான் பாக்கி இருக்கிறது.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) நியமிக்கப்பட்டார்கள். கோடிக்கணக்கான உறுப்பினர்கள் உள்ள நம்முடைய இயக்கத்தில் பல கட்ட ஆய்வுகளுக்குப் பிறகே ‘வாக்குச்சாவடி பொறுப்பாளர்’ என்ற அடையாள அட்டை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் பெற்றிருக்கும் உங்களை எல்லாம் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

உங்களுக்கான வகுப்புகள் காலை முதல் மாலை வரை - நாங்கள் வரும் வரை நடந்திருக்கிறது. ’வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் கடமைகளும் பணிகளும்’ என்ற தலைப்பில் நம்முடைய கழகத்தின் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி., அவர்களும் - ’வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள் மற்றும் அதன் முக்கியத்துவம்’ குறித்து நம்முடைய அருமைச் செயல்வீரர் நந்தகுமார் அவர்களும் - ’சமூக வலைத்தளங்களின் பயன்பாடும், செயல்படுத்த வேண்டிய முறையும்‘ என்பது குறித்து அருமைத் தம்பி எஸ்.கே.பி. கருணா அவர்களும் உங்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். கழகத்தின் வரலாறு, அடிப்படைக் கொள்கைகள், திராவிட இயக்கத்தின் கோட்பாடுகள், நவீன தமிழ்நாட்டை உருவாக்க நாம் எடுத்த முயற்சிகள் - திராவிட மாடல் ஆட்சி ஆகியவை குறித்த அடிப்படை தகவல்களை நம்முடைய பேரன்பிற்குரிய லியோனி அவர்களும் - மருத்துவர் எழிலன் அவர்களும் உங்களுக்கு எடுத்துச் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்.

இவர்கள் மூலமாக கொள்கை வழிகாட்டுதலும் - தேர்தல் பயிற்சியும் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது எல்லாவற்றையும் மனதில் வைத்து நீங்கள் செயல்பட வேண்டும். இதெல்லாம் இந்தத் தேர்தலுக்கு மட்டுமல்ல, எல்லா தேர்தலுக்கும் பயன்படுத்த வேண்டிய பணிகள்!

திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு - ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள்.

உங்களை எல்லாம் ஒருங்கிணைத்து, அழைத்து வந்திருக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்களான, அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் காந்தி, அமைச்சர் மஸ்தான், தா.உதயசூரியன், நந்தகுமார், புகழேந்தி, தடங்கம் சுப்பிரமணி, ஒய்.பிரகாஷ், தேவராஜி, வசந்தம் கார்த்திகேயன், தரணிவேந்தன், மதியழகன், பழனியப்பன் என அனைவர்க்கும் என்னுடைய நன்றியை தலைமைக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்!

வாக்குச்சாவடி பொறுப்பாளர்களான நீங்கள்தான் உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் வாக்காளர்களுக்கு முழு பொறுப்பாளர். வாக்குச் சாவடிப் பொறுப்பாளர் என்றால், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கும் நீங்கள்தான் பொறுப்பாளர்! மறந்துவிடாதீர்கள்! உங்களை நம்பித்தான் ’நாற்பதும் நமதே! நாடும் நமதே!’ என்று நான் கம்பீரமாக முழங்குகிறேன்! அதே கம்பீரத்தோடு இன்று முதலே நீங்களும் தேர்தல் பொறுப்பாளராக கடமையாற்ற வேண்டும்! அந்த வகையில் வெற்றி ஒன்றுதான் உங்களின் இலக்காக இருக்க வேண்டும். இந்த வெற்றியை அடைவதற்கான வழிமுறைகளில் நீங்கள் மிகச்சரியாக செல்ல வேண்டும்!

பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் உங்களுக்கு நிறைய கடமைகள் இருக்கிறது. நீங்கள் மறந்துவிட கூடாது.

* வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது, முதல் பணி! வாக்காளர் பட்டியலில் உங்கள் வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர்களின் விவரங்கள் சரியாக இருக்கிறதா, யாராவது போலி வாக்காளர்கள் இருக்கிறார்களா, இறந்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கிறதா என்று முழுவதுமாகச் சரிபார்க்கும் கடமை உங்களுடையது.

* வாக்காளர்களை சந்தித்து, பிரச்சாரம் - பரப்புரை மேற்கொள்வதும், நம்முடைய சாதனைகளை அவர்களிடம் தொடர்ந்து எடுத்துச் சொல்வதும் இரண்டாவது பணி!

* வாக்குப்பதிவு நாட்களில் வாக்காளர்களை வாக்குப்பதிவு மையங்களுக்கு வரவைப்பது மூன்றாவது பணி! இது மிகமிக முக்கியமான பணி!

உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் நீங்கள் ஒருவராக மாற வேண்டும். முதலில், உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் ஒவ்வொருவரை பற்றியும் முழுவதுமாக தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அதற்கான மாதிரிப் படிவம்தான் இப்போது, உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தொகுதிவாரியாக அச்சிடப்பட்டு உங்களிடம் சீக்கிரமாக வந்து சேரும். வாக்காளரின் பெயர், வயது, அவர்கள் குடும்பத்தினர் யார் யார், என்ன படித்திருக்கிறார்கள், என்ன தொழில் செய்கிறார்கள், எந்தக் கட்சியை சார்ந்தவர் என்ற முழு விவரமும் உங்களிடம் இருக்க வேண்டும். தினமும் ஒருமணி நேரத்தைக் கழகத்துக்காக ஒதுக்குங்கள். ஒதுக்குவீர்களா?

அடுத்ததாக, அரசின் திட்டங்களையும் முழுமையாகத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கும் புத்தகத்தைப் படித்துப் பார்த்தாலே அரசின் திட்டங்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்துவிடும். யாருக்கு என்ன தேவையோ அதை பெற்றுத் தாருங்கள். முதியோர் உதவித் தொகை, பட்டா மாறுதலில் உதவி, இவ்வாறு என்ன உதவி தேவை என்று கேட்டு நிறைவேற்றித் தாருங்கள். இதனைச் செய்து தர உங்கள் பகுதியின் ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்களையோ, சட்டமன்ற உறுப்பினர்களையோ அல்லது அமைச்சர்களையோ நீங்கள் அணுகுங்கள்.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கொண்டு வரும் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று எல்லோரிடமும், குறிப்பாக அமைச்சர்களிடமும் கட்டாயமாகச் சொல்லுவேன். நீங்கள் கொண்டு வரும் தகுதி வாய்ந்த கோரிக்கைகள் கட்டாயம் நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை நான் இங்கு அழுத்தம் திருத்தமாக குறிப்பிட விரும்புகிறேன்.

ஒவ்வொரு நாளும் பத்து வீட்டுக்குப் சென்று பேசுங்கள். ஒரு மாதத்தில் உங்கள் பூத்தில் இருக்கும் அத்தனை வீட்டிற்கும் சென்று வந்துவிடலாம். ஒரு சிலர் வரவேற்கவில்லை என்றாலும் திரும்ப திரும்ப செல்லுங்கள். நம்முடைய சாதனைகளை எடுத்துச் சொல்லிப் புரிய வையுங்கள். எல்லார்க்கும் பொதுவான மக்களாட்சியை நாம் நடத்திக் கொண்டு வருகிறோம். நம்முடைய திட்டங்களால் தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒருவிதத்தில் பயனடைகிறது. அப்படி பார்த்து பார்த்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். இதனால் மக்கள் நம்முடைய ஆட்சிமீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

கோடிக்கணக்கான பெண்களுக்கு பயனளிக்கும் திட்டம்தான் மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம்!

ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.

42 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெற்றுவரும் 1000 ரூபாய் உதவித்தொகையை 1200 ரூபாயாக ஆக்கி இருக்கிறோம்.

18 லட்சம் பள்ளி மாணவ மாணவியர்க்கு காலை உணவுத் திட்டம்!

13 லட்சம் பெண்களின் நகைக்கடன் ரத்து!

இவ்வாறு கோடிக்கணக்கான - இலட்சக்கணக்கானவர்கள் பயன்பெறும் திட்டங்களை நிறைவேற்றுகிற அரசுதான், நம்முடைய திராவிட மாடல் அரசு! இதையெல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். நம்முடைய திட்டங்கள் மூலமாக பயனடைந்தவர்கள், ஊடகங்களில் தரும் பேட்டிகளில் உள்ளத்தில் இருந்து பேசுகிறார்கள். அது மகிழ்ச்சியாக இருக்கிறது. தேர்தலுக்கு முன்பு இருந்ததைவிட, ஐந்து, ஆறு மாதங்களுக்கு முன்பு நான் சுற்றுப்பயணம் செய்தபோது இருந்த மகிழ்ச்சியைவிட, உணர்ச்சியைவிட, வரவேற்பைவிட இப்போது கடந்த இரண்டு மாதகாலமாக எங்கு பார்த்தாலும் பெண்கள் அலைமோதுகிற அந்தக் கூட்டத்தை நான் கண்கூடாக பார்க்கிறேன். என்ன காரணம்? 1,000 ரூபாய். அது இன்றைக்கு மகளிரை ஈர்த்திருக்கிறது. வாக்களித்தவர்கள் மட்டுமல்ல - நம்மை எதிர்த்தவர்கள்கூட இப்போது பாராட்டுகிறார்கள். இது நம்முடைய எதிரிகளை அச்சமடைய வைத்திருக்கிறது.

சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் பேசியிருக்கிறார். பத்திரிகைகளில் படித்துப் பார்த்தேன். அது பேச்சு அல்ல, வயிற்றெரிச்சல். தன்னுடைய வயிற்றெரிச்சலை வார்த்தைகளாகக் கொட்டி இருக்கிறார். தி.மு.க. ஆட்சிக்கு வந்து எந்த ஒரு புதிய திட்டத்தையும் கொண்டுவரவில்லை என்று பேசியிருக்கிறார். இந்த இரண்டரை ஆண்டுகால சாதனைகளைச் சொல்ல ஆரம்பித்தால் அதற்கே இரண்டு மணி நேரமாகும்! அவ்வளவு சாதனைகளை செய்திருக்கிறோம்!

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த ‘பச்சைப் பொய்யர்’ பழனிசாமி, சொன்னதிலேயே பெரிய பொய் எது என்றால் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களைதான் ரிப்பன் வெட்டி நாம் தொடங்கி வைக்கிறோமாம். பிளான் போட்டு, கட்டி முடித்து வைத்துவிட்டார்களாம். நாம் சென்று ரிப்பன் வெட்டிவிட்டு வந்துவிட்டோமாம். யாரு? பொய்ச்சாமி, மன்னிக்கவும் பழனிசாமி பேசுகிறார்.

நான் கேட்கிறேன், மகளிருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோமே? அது நீங்கள் போட்ட திட்டமா?

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்களை அன்போடு பணிவோடு கேட்கிறேன், விடியல் பயணம் - பெண்களுக்கான இலவசப் பேருந்து பயணத் திட்டம் நீங்கள் போட்ட திட்டமா?

காலைச் சிற்றுண்டித் திட்டம், யார் போட்ட திட்டம்?

புதுமை பெண் திட்டத்தில், மாணவியர்க்கு 1000 ரூபாய் தருகிறோமே, இது பழனிசாமியின் திட்டமா?

இலட்சக்கணக்கான மாணவர்களை முன்னேற்றும் ’நான் முதல்வன் திட்டம்’ அ.தி.மு.க. திட்டமா?

நம்மைக் காக்கும் 48, இல்லம் தேடிக் கல்வி - இதெல்லாம் என்ன என்றாவது பச்சைப் பொய்யர் பழனிசாமிக்கு தெரியுமா?

2 லட்சம் உழவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம். இது அ.தி.மு.க. திட்டமா?






ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழக வீரர் மாரியப்பனுக்கு பிரதமர், முதல்வர் வாழ்த்து

### பாரா ஆசிய விளையாட்டு போட்டி: இந்தியா வீரர்கள் 7 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கல பதக்கங்கள் பெற்று அபாரம்




சென்னைஇ 24 அக்டோபர் 2023: பாரா ஆசிய விளையாட்டு போட்டி இந்தியா வீரர்கள் 7 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கல பதக்கங்கள் பெற்று சாதனை படைத்து வருகிறது.

சீனாவில் உள்ள ஹாங்சோ நகரில் நேற்று முன்தினம் முதல் பாரா ஆசிய விளையாட்டு போட்டி நடைபெற்று வருகிறது. வரும் 28ம் தேதி வரை நடைபெறுகிறது. கடந்த முறை நடைபெற்ற போட்டிகளில் இந்தியா சார்பில் 13 போட்டிகளில் 190 வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்ட நிலையில், தற்போது நடைபெறும் போட்டியில் இந்தியா சார்பில், 191 வீரர்கள், 112 வீராங்கனைகள் என மொத்தம் 303 பேர் பங்கேற்றுள்ளனர். அதேபோல் இந்தியாவில் இருந்து 143 பயிற்சியாளர்களும் சீனா சென்றுள்ளனர். இந்த வீரர் மற்றும் வீராங்கனைகள் அங்கு நடைபெறும் 17 விதமான போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இந்நிலையில், பாரா ஆசிய போட்டியில் இந்தியா வீரர்கள் தொடர்ந்து பதக்கங்கள் பெற்று சாதனை படைத்து வருகின்றனர். இதில், ஆடவர் உயரம் தாண்டுதலில் சைலேஷ் குமார் தங்கம் வென்றுள்ளார். தொடர்ந்து, தமிழகத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு வெள்ளி பதக்கம், ராம் சிங் வெண்கலமும் வென்றார். ஆடவருக்கான உயரம் தாண்டுதல் டி47 பிரிவில் நிஷாத் குமார் 2.02 மீட்டர் உயரம் பாய்ந்து தங்கம் வென்றார். அதேபோல், ராம் பால் 1.94 மீட்டர் உயரம் பாய்ந்து வெண்கலம் வென்றார். பெண்களுக்கான 10மீ ஏர் ரைபிள் ஸ்டாண்ட் எஸ்எச்1 இறுதிப் போட்டியில் அவனி லெகாரா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, 249.6 புள்ளிகளுடன் கேம்ஸ் சாதனையை முறியடித்து, இந்தியாவின் நான்காவது தங்கத்தை உறுதி செய்தார். அதேபோல் ஜூடோவில் இந்தியா இரண்டு பதக்கங்களை பெற்றது.

இதைதொடர்ந்து, ஆடவர் எப்51 கிளப் எறிதல் போட்டியிலும் இந்தியா தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.அதன்படி, எப்51 கிளப் எறிதல் போட்டியில் இந்திய வீரர் பிரணவ் சூர்மா தங்கம் வென்றார். தொடர்ந்து, தரம்பிட், அமித் குமார் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர். இந்த போட்டி தொடரில் ஆண்களுக்கான 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்திய வீரர் அங்குர் தாமா தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளார். இதன்மூலம் தற்போது வரை பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் 7 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலம் வென்று 4வது இடத்தில் இந்தியா உள்ளது.

சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வரும் பாரா ஆசிய விளையாட்டு போட்டிகளின் உயரம் தாண்டும் ஆட்டத்தில் தமிழக வீரர் மாரியப்பன் தங்கவேலு இரண்டாம் இடத்தைப் பிடித்து வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். அவருக்கு பிரதமர், முதல்வர் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வரும் பாரா ஆசிய விளையாட்டு போட்டிகளின் ஆண்கள் உயரம் தாண்டுதல் டி63 பிரிவில் தமிழக வீரர் மாரியப்பன் தங்கவேலு இரண்டாம் இடத்தைப் பிடித்து வெள்ளிப்பதக்கம் வென்றிருப்பது அவரது திறமைக்கும் உறுதிக்கு ஒரு சான்றாகும். இதற்காக அவருக்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது எதிர்கால முயற்சிகளுக்கு எனது வாழ்த்துகள் என்று மோடி குறிப்பிட்டுள்ளார்.

இதே உயரம் தாண்டும் போட்டிகளில் தங்கம் வென்ற இந்திய வீரர் சைலேஷ் குமாருக்கு மனமார்ந்த வாழ்த்துகள். ஆண்கள் உயரம் தாண்டுதல் டி63 பிரிவில் அவரது செயல்திறன் அசாதாரணமானது. அவரது உறுதியும், கடின உழைப்பும் அனைவருக்கும் உத்வேகம் அளிக்கிறது என்று மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பாரா ஆசிய விளையாட்டு போட்டியில் உயரம் தாண்டுதல் ஜி63 பிரிவில் வெள்ளி வென்று தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் மீண்டும் ஒருமுறை பெருமை தேடித் தந்துள்ள நமது மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என பதிவிட்டுள்ளார்.

# தொடர் படப்பிடிப்பில் ஏஜிஎஸ் #25-தளபதி #68-விபி #12

## கல்பாத்தி எஸ். அகோரமின் ஏஜிஎஸ் எண்டர்டெயின்மெண்ட் தயாரிப்பில் #தளபதி68, வெங்கட் பிரபு இயக்க யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார்





சென்னை, 24 அக்டோபர் 2023: தென்னிந்திய சினிமாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனமான ஏ ஜி எஸ் என்டர்டெயின்மென்ட்டின் கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ் மற்றும் கல்பாத்தி எஸ். சுரேஷ் ஆகியோர் தங்களின் 25-வது திரைப்படத்திற்காக தளபதி விஜய்யுடன் இணைந்துள்ளனர். மிகுந்த பொருட்செலவில் உருவாகி வரும் இப்படத்தை வெங்கட் பிரபு இயக்க, யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். இப்படத்தின் கிரியேட்டிவ் தயாரிப்பாளராக அர்ச்சனா கல்பாத்தி பணியாற்றுகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 'பிகில்' திரைப்படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு, தளபதி விஜய்யுடன் இரண்டாவது முறையாக அவரது 68-வது படத்திற்காக ஏ ஜி எஸ் என்டர்டெயின்மென்ட் இணைகிறது. #ஜிலீணீறீணீஜீணீமீலீஹ் 68 என்று அழைக்கப்படும் இத்திரைப்படமானது ஏஜிஎஸ்-ன் 25-வது படைப்பு என்பதோடு இதுவரை இந்நிறுவனம் தயாரித்துள்ள திரைப்படங்களிலேயே மிக பிரமாண்டமான வகையில் உருவாக உள்ளது. சிறந்த உள்ளடக்கம் மற்றும் உயர்தர தயாரிப்பு என கடந்த 25 படங்களாக முத்திரை பதித்துள்ள ஏ ஜி எஸ் எண்டர்டெயின்மென்ட், #தளபதி68 அதன் மிகச்சிறந்த படமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது. ஏஜிஎஸ், தளபதி விஜய் மற்றும் வெங்கட் பிரபு ஆகியோரின் இந்த அற்புதமான கூட்டணிக்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக, யுவன் ஷங்கர் ராஜா இப்படத்திற்கு இசையமைக்கிறார். அனைத்து பார்வையாளர்களாலும் விரும்பப்படும் சிறந்த பொழுதுபோக்கு படமாக #தளபதி68 இருக்கும். சர்வதேச தரத்தில் உருவாகி வரும் இத்திரைப்படத்தில் டாப் ஸ்டார் பிரசாந்த், நடன சூறாவளி பிரபுதேவா, வெள்ளி விழா நாயகன் மோகன் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கிறனர். இவர்களுடன், மீனாட்சி சவுத்ரி, சினேகா, லைலா, யோகி பாபு, ஜெயராம், அஜ்மல், விடிவி கணேஷ், வைபவ், பிரேம்ஜி, அஜய் ராஜ், அரவிந்த் ஆகாஷ் உள்ளிட்ட பெரும் நட்சத்திர பட்டாளமே நடிக்கிறது. சித்தார்தா நுனி ஒளிப்பதிவு செய்ய, ராஜீவன் கலை இயக்கத்தை கவனிக்க, வெங்கட் ராஜன் படத்தொகுப்புக்கு பொறுப்பேற்க, திலீப் சுப்பராயன் சண்டை காட்சிகளை வடிவமைக்கிறார். படத்தலைப்பு உள்ளிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் தயாரிப்பு நிறுவனத்தால் உரிய நேரத்தில் வெளியிடப்படும்.

கிரியேட்டிவ் தயாரிப்பாளர்: அர்ச்சனா கல்பாத்தி, நிர்வாக தயாரிப்பு: எஸ். எம். வெங்கட் மாணிக்கம். கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ்.கணேஷ் மற்றும் கல்பாத்தி எஸ். சுரேஷ் ஆகியோரின் ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகவுள்ள #தளபதி68, 2024-ம் ஆண்டு வெளியாகும்.

# டி.என்.பி.எஸ்.சி. தலைவர் நியமனம்:

## தமிழ்நாடு அரசின் பரிந்துரையை நிராகரித்த ஆளுநருக்கு சிபிஐ (எம்) கண்டனம்

சென்னை, 24 அக்டோபர் 2023: சிபி எம்-ன் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற டி.ஜி.பி. சைலேந்திரபாபுவையும், உறுப்பினராக சிவக்குமாரையும் நியமிக்க வேண்டுமென தமிழ்நாடு அரசின் பரிந்துரையை ஆளுநர் ஆர்.என். ரவி நிராகரித்துள்ளதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற டிஜிபி சைலேந்திரபாபுவை நியமிக்க ஸீண்டுமென தமிழ்நாடு அரசு பரிந்துரை செய்து ஆளுநருக்கு அனுப்பி வைத்திருந்தது. இதற்கு விளக்கம் கேட்டு ஆளுநர் எழுப்பிய கேள்விகளுக்கு தமிழ்நாடு அரசு உரிய முறையில் பதில் அளித்தும் தமிழ்நாடு ஆளுநர் வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் நிராகரித்துள்ளார்.

ஆளுநர் ஆர்.என். ரவி தான் போகும் நிகழ்ச்சிகளில் எல்லாம் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தங்களை பரப்பி வருவதுடன் ஒரு முழுநேர அரசியல்வாதியாக செயல்பட்டு வருகிறார். தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க தலைவர்களையும், சுதந்திரப் போராட்ட தியாகிகளையும் சிறுமைபடுத்தி பேசுவதுடன் அவதூறுகளையும் பொழிந்து வருகிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட நீட் தேர்வு விலக்கு உள்ளிட்டு 20க்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டுள்ளார். தமிழ்நாடு அரசின் மக்கள் நலத் திட்டங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும், பரிந்துரைகளுக்கும் ஒப்புதல் அளிக்காமல் வரம்புகளை மீறி தொடர்ந்து நிராகரித்து வருகிறார். இவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாட்டு மக்களும், ஜனநாயக இயக்கங்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து குரெலழுப்பியும் ஒன்றிய அரசு வேடிக்கை பார்த்து வருவது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் முழுநேர அரசியல்வாதியாகவும், தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களின் நலன்களுக்கும் விரோதமாக முட்டுக்கட்டையாக செயல்படும் ஆளுநர் ஆர்.என். ரவியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

# 'அவனிடம் சொல்வேன்' : குழந்தைகள் மீதான போரின் தாக்கத்தை விளக்கும் பாடல்




சென்னை, 24 அக்டோபர் 2023: தனி இசைக்கலைஞர்களை ஆதரிப்பதற்காக, பா மியூசிக் தொடர்ந்து இயங்கி வருகிறது. அந்த வகையில் இசையமைப்பாளர் ரமேஷ் தமிழ்மணி இசையில், பாடகி உத்தரா உன்னிகிருஷ்ணனின் குரலில் 'அவனிடம் சொல்வேன்' என்ற பாடல் இத்தளத்தில் வெளியாகியுள்ளது. உலகெங்கும் போரின் தாக்கங்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில், இந்த அவலச் சூழலால் குழந்தைகளின் வாழ்க்கை எத்தனை பாதிப்புக்குள்ளாகிறது என்பதை ஒரு சிறுமியின் கண்ணோட்டத்தில் இருந்து வெளிப்படுத்தும் வகையில் பாடலாசிரியர் மதன் கார்க்கி வரிகளை வடித்துள்ளார்.

இப்பாடலைப் பா மியூசிக் யூடியூப் தளத்தில் கேட்கலாம்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சென்னை அமெரிக்க மையம் ஹாலோவீன் கொண்டாட்டத்திற்கு தயாராகிறது

## அக்டோபர் 28 அன்று நாள் முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் குடும்பத்துடன் கலந்து கொள்ளலாம்

சென்னை, 24 அக்டோபர் 2023: சென்னை அமெரிக்க துணைத் தூதரகத்தில் அமைந்துள்ள அமெரிக்க மையத்தில் அக்டோபர் 28, சனிக்கிழமை காலை 9:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை நடைபெறவுள்ள ஹாலோவீன் கொண்டாட்டத்தில் பொதுமக்கள் குடும்பத்துடன் கலந்து கொள்ளலாம்.

ஹாலோவீன் என்பது அமெரிக்கா முழுவதும் உள்ள சமூகங்கள் கொண்டாடும் ஒரு பாரம்பரிய விழா ஆகும். குடும்பத்துடன் கொண்டாடப்படும் இந்த விடுமுறையின் போது வீடுகள் மற்றும் புல்வெளிகள் செதுக்கப்பட்ட பூசணிக்காய்கள் மற்றும் வேடிக்கையான பொருட்கள் கொண்டு அலங்கரிக்கப்படும். மிட்டாய் உள்ளிட்ட இனிப்பு வகைகள் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும். ஹாலோவீன் என்பது அச்சமூட்டும் திரைப்படங்கள் மற்றும் பயமுறுத்தும் விளையாட்டுகளால் ஆனது மட்டுமல்ல, குழந்தைகள் மற்றும் பெற்றோரின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் மாயாஜால கற்பனைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு குடும்ப மற்றும் சமூக கொண்டாட்டமும் ஆகும்.

ஹாலோவீனின் மகிழ்ச்சியைப் பரப்புவதற்காக, சென்னையில் உள்ள அமெரிக்க மையம் வரும் சனிக்கிழமை அன்று நாள் முழுவதும் வேடிக்கை நிறைந்த நிகழ்ச்சிகளை நடத்தும்.

உங்களுக்குப் பிடித்தமான கதாபாத்திரம் போல் உடையணிந்து, ஹாலோவீன் தொடர்பான பல செயல்பாடுகளில் நீங்கள் பங்கேற்கலாம். காலை 10:30 மணிக்கு உங்கள் ட்ரிக்-ஆர்-ட்ரீட் பைகளை நீங்களே உருவாக்குவதற்கான செயல்விளக்கம் அளிக்கப்பட உள்ளது, காலை 11:00 மணிக்கு எஸ்கேப் ரூம் சாகசமும், நண்பகல் 12 மணிக்கு ஹாலோவீன் தொடர்பான திரைப்படக் காட்சியும் மற்றும் மதியம் 2:30 மணிக்கு கதை கூறல் (3 முதல் 9 வயது வரை) நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஹாலோவீன் தொடர்பான சுவாரசியமான பொருட்களை நாள் முழுவதும் நீங்கள் 3டி-ப்ரிண்ட் செய்யலாம். அமெரிக்க மையத்தின் நூலகத்தில் உள்ள புத்தகங்களைப் படித்து மகிழலாம்.

சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தின் பொதுமக்கள் உறவு மற்றும் கலாச்சார விவகாரங்கள் அதிகாரி ஸ்காட் ஹார்ட்மேன் கூறுகையில், "ஹாலோவீன் என்பது அச்சுறுத்தும் மற்றும் பயமுறுத்தும் விஷயங்களைப் பற்றியது என்று பலர் கருதுகின்றனர். ஆனால், அமெரிக்காவில் குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் மிகவும் விரும்பப்படும் விடுமுறை நாட்களில் ஒன்றாக ஹாலோவீன் திகழ்கிறது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து படைப்பாற்றலையும், நமது கற்பனைகளையும் தாராளமாக வெளிப்படுத்துவதற்கும், குழந்தைகளுக்கு நல்ல வேடிக்கையான அனுபவத்தை வழங்குவதற்குமான நேரம் இதுவாகும்," என்றார்.

# உற்சாக அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடிய கொண்டாட்ட பாடாலான "லேகே பிரபு கா நாம்"

## என்கிற டைகர் 3யின் முதல் பாடலை யஷ்ராஜ் பிலிம்ஸ் வெளியிட்டுள்ளது




சென்னை, 24 அக்டோபர் 2023: மெகா ஸ்டார்களான சல்மான் கான் மற்றும் கத்ரீனா கைப் இருவரும் இந்திய சினிமா வரலாற்றில் எப்போதுமே மிகப்பெரிய ஆன்-ஸ்கிரீன் ஜோடி. அவர்கள் வரலாற்று வெற்றிகளையும் தலைமுறை தாண்டிய சூப்பர் ஹிட் பாடல்களையும் வழங்கியுள்ளனர்.

தற்போது இவர்கள் இருவரும் ஆதித்யா சோப்ராவின் ஸ்பை யுனிவர்ஸின் 'டைகர் 3'யில் பெருமைமிக்க டைகர் மற்றும் சோயா என்கிற தங்களது சூப்பர் ஏஜென்ட் கதாபாத்திரங்களுக்கு மீண்டும் ஒருமுறை திரும்பியுள்ளனர்.

யஷ்ராஜ் பிலிம்ஸ் கடந்த வாரம் டைகர் 3 யின் முதல் பாடலுக்கான டீசரை வெளியிட்டது. இதோ இன்று கொண்டாட்ட பாடாலான "லேகே பிரபு கா நாம்" பாடலை வெளியிட்டுள்ளது. கடைசியாக 'டைகர் ஜிந்தா ஹை' படத்தில் இடம்பெற்ற அந்த வருடத்தின் மிகப்பெரிய ஹிட்டாக அமைந்த "ஸ்வாக் சே ஸ்வாகத்" பாடலுக்கு இந்த இரண்டு சூப்பர்ஸ்டார்களும் ஒன்றாக இணைந்து ஆடியதை தொடர்ந்து தற்போது இந்த பாடலுக்கான எதிர்பார்ப்புகள் வானளவு உயர்ந்து இருக்கின்றன.

சல்மான் கான் மற்றும் கத்ரீனா கைப் இருவரும் மீண்டும் ஒருமுறை உற்சாக அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடிய தோற்றத்துடன் "லேகே பிரபு கா நாம்" பாடலுக்கு தங்கள் இதயம் நொறுங்கும் அளவுக்கு ஆடியுள்ள நடனத்தை காண இங்கே கிளிக் செய்யுங்கள்.

# 'டைகர் 3'ன் "லேகே பிரபு கா நாம்" பாடலில் 7 அதிரடியான தோற்றங்களுடன் இணையத்தை பற்றியெரிய விடும் கத்ரீனா கைப்



சென்னை, 24 அக்டோபர் 2023: நம்மிடம் இருப்பவர்களில் மிகவும் அழகான நடிகைகளில் ஒருவரான கத்ரீனா கைப், 'டைகர் 3' படத்தில் இருந்து வரும் அக்-23ஆம் தேதி வெளியாகவுள்ள "லேகே பிரபு கா நாம்" பாடலில் இதயங்களை உருக வைக்கவும் இணையத்தை பற்றியெரிய வைக்கவும் தயாராகி வருகிறார்.

கத்ரீனா கைப் 'டைகர் 3'ன் "லேகே பிரபு கா நாம்" பாடலில் 7 அதிரடியான தோற்றங்களில் தோன்றுவதுடன் தனது ஒட்டுமொத்த திரையுலக பயணத்தில் மிகசிறந்த பாடல்களில் ஒன்றாகவும் இருக்கும் என்றும் கூறுகிறார்.

கத்ரீனா கூறும்போது "லேகே பிரபு கா நாம்" பாடல் கண்ணை கவரும் பாடலாக உருவாகி இருக்கிறது. துருக்கியின் கப்படோசியாவின் சுவாசத்தை திணறவைக்கும் பின்னணியில் அமைந்துள்ள இந்த பாடல் எனக்கு காட்சி ரீதியாக மிகவும் பிடித்த பாடல்களில் ஒன்றாக இருக்கும். மாஷால்லா மற்றும் ஸ்வாக் சே ஸ்வாகத்துக்குப் பிறகு எனக்குப் பிடித்த வைபவி மெர்ச்சன்ட்டுடன் மீண்டும் ஒருமுறை மீண்டும் இணைந்திருக்கிறேன்" என்கிறார்.

மேலும் அவர் கூறும்போது, "எனக்கான பிரமிக்க வைக்கும் தோற்றங்களை உருவாக்குவதில் உண்மையிலேயே சிறந்து விளங்கும் அனைதா ஷராஃப் அடஜானியா எனது அலங்காரத்தை மேற்கொண்டுள்ளார். "லேகே பிரபு கா நாம்" பாடலில் ஒவ்வொன்றும் மறுக்க முடியாத கவர்ச்சி மற்றும் தனித்துவமான சில் - அவுட் தோற்றங்களை வெளிப்படுத்தும் விதமாக 7 குறிப்பிடத்தக்க தோற்றங்களை அனைதா வடிவமைத்திருக்கிறார்" என்கிறார்.

நேற்று வெளியிடப்பட்ட இந்த பாடலின் டீசர் உடனடியாக வைரலானது. பிரீத்தம் இசையமைப்பில் பென்னி தயாள் மற்றும் அனுஷா மணி பாடியுள்ள இந்தப்பாடலில் சல்மான் கானும் கத்ரீனாவும் நம்பமுடியாத கெமிஸ்ட்ரியை வெளிப்படுத்தி உள்ளனர். இந்த பாடலில் இவர்கள் இருவருக்குமான அழகிய தோற்றத்தை பார்க்கும்போது இது இந்த பண்டிகை சீசனில் ஒரு பார்ட்டி ஆந்ததமாக நிச்சயமாக மாறும்.

கத்ரீனா மேலும் கூறும்போது, "டைகர் வரிசையில் இருந்தும் வெளியாகும் பாடல்கள் எப்போதும் சூப்பர்ஹிட் பாடல்களாகவே இருந்திருக்கின்றன. அந்தவகையில் இந்த "லேகே பிரபு கா நாம்" பாடலும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் விதமாக இருக்கும்" என்கிறார்.

மேலும் அவர் கூறுகையில், "டைகர் படங்களில் பாடல்கள் ஹைலைட்டான அம்சங்களில் ஒன்றாகவே இருந்திருக்கின்றன. இந்த பாடலில் டைகர் மற்றும் சோயா இருவருக்கும் இடையேயான அதிர்வையும் சக்தியையும் ஒரு புதிய பாணியில் வைபவி உள்ளடக்கி இருக்கும் விதத்தை நான் ரசிக்கிறேன். எங்கள் இருவரிடமிருந்தும் ரசிகர்கள் எதிர்பார்க்கும் பாடலின் துடிப்பான மற்றும் ஆற்றல் மிக்க உணர்வை இது உள்ளடக்கியது" என்கிறார்.

எப்போதும் சல்மான் கானுடன் நடனம் ஆடுவதை விரும்புகிறார் கத்ரீனா. இதுபற்றி அவர் கூறுகையில், "சல்மான் கானுடன் நடனம் ஆடுவது அற்புதமானது. மேலும் இந்த "லேகே பிரபு கா நாம்" பாடலின் மூலம் பல ஆச்சரியப்படத்தக்க நினைவுகளை என்னுடன் எடுத்து செல்கிறேன். ஸ்வாக் சே ஸ்வாகத் பாடல் அளவுக்கதிகமான அன்பை பெற்றது போல இந்த "லேகே பிரபு கா நாம்" பாடலும் இன்னும் உயரம் தொடும் என நம்புகிறோம்" என்கிறார்.

சல்மான் கான் & கத்ரீனா கைப் இந்திய சினிமா வரலாற்றில் எப்போதுமே மிகப்பெரிய ஆன்-ஸ்கிரீன் ஜோடி. அவர்கள் வரலாற்று வெற்றிகளையும் தலைமுறை தாண்டிய பாடல்களையும் வழங்கியுள்ளனர். தற்போது இவர்கள் இருவரும் ஆதித்யா சோப்ராவின் ஸ்பை யுனிவர்ஸின் 'டைகர் 3'யில் பெருமைமிக்க டைகர் மற்றும் சோயா என்கிற தங்களது சூப்பர் ஏஜென்ட் கதாபாத்திரங்களுக்கு மீண்டும் ஒருமுறை திரும்பியுள்ளதுடன் இணையத்தையும் அதிரவைத்துள்ளனர்.

மனீஷ் சர்மா இயக்கியுள்ள 'டைகர் 3' இந்த வருடம் நவம்பர்-12ஆம் தேதி ஞாயிறு தீபாவளியில் வெளியாகிறது.

# "கத்ரீனாவும் நானும் ஒவ்வொரு முறையும் ஒரு பாடலில் இடம் பெறும்போது மக்களிடம் அதற்கான எதிர்பார்ப்பு வானளவு உயர்ந்து விடும்'



சென்னை, 24 அக்டோபர் 2023: சல்மான்-கத்ரீனா இருவரும் 'டைகர் 3'யின் "'லேகே பிரபு கா நாம்" பாடலின் மூலம் நாட்டையே ஆடவைக்க போகிறார்கள் மெகா ஸ்டார்களான சல்மான் கான் மற்றும் கத்ரீனா கைப் இருவரும் இந்திய சினிமா வரலாற்றில் எப்போதுமே மிகப்பெரிய ஆன்-ஸ்கிரீன் ஜோடி. அவர்கள் வரலாற்று வெற்றிகளையும் தலைமுறை தாண்டிய சூப்பர் ஹிட் பாடல்களையும் வழங்கியுள்ளனர். தற்போது இவர்கள் இருவரும் ஆதித்யா சோப்ராவின் ஸ்பை யுனிவர்ஸின் 'டைகர் 3'யில் பெருமைமிக்க டைகர் மற்றும் சோயா என்கிற தங்களது சூப்பர் ஏஜென்ட் கதாபாத்திரங்களுக்கு மீண்டும் ஒருமுறை திரும்பியுள்ளனர்.

'டைகர் 3'யின் டிரைலர் வெகுஜன மக்களிடம் வெறித்தனத்தை உருவாக்கியுள்ளதுடன் தற்போது இந்த வருடத்தின் மிகப்பெரிய எதிர்பார்ப்பிற்குரிய படமாகவும் இது மாறியுள்ளது. தற்போது ஒரு பார்ட்டி பாடலான "லேகே பிரபு கா நாம்" என்கிற இந்தப்படத்தின் முதல் பாடலை நாளை காலை 11 மணிக்கு யஷ்ராஜ் பிலிம்ஸ் வெளியிட இருக்கிறது. சல்மான் கானும் கத்ரீனாவும் மீண்டும் இணைந்து ஆடுவதை பார்க்க இணையதளமும் மிகுந்த ஆவலில் இருக்கிறது.


சல்மான் கான் கூறும்போது, "கத்ரீனாவும் நானும் சில சிறந்த பாடல்களை ஒன்றாக பெற்றுள்ளோம். அதனாலேயே ஒவ்வொரு முறையும் நாங்கள் ஒரு பாடலில் இணையும்போது மக்களிடம் எதிர்பார்ப்பு வானளவு உயரும் என்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. "லேகே பிரபு கா நாம்" பாடல் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் என உறுதியாக நம்புகிறேன்" என்கிறார்

மேலும் அவர் கூறும்போது, "நான் தனிப்பட்ட முறையில் ரொம்பவே விரும்பும் நடன பாடல் இது.. எனது திரையுலக பயணத்தில் சிறந்த நடனப் பாடல்களில் ஒன்றாக இது இருக்கும். உலகெங்கிலும் உள்ள மக்களை மகிழ்வித்த சூப்பர் ஹிட் பாடல்களை பெற்றதில் கத்ரீனாவும் நானும் அதிர்ஷ்டசாலிகளாகவே இருந்திருக்கிறோம். அந்தவகையில் இந்த "லேகே பிரபு கா நாம்" பாடலும் அந்த பட்டியலில் இடம்பிடிப்பதுடன் உலக அளவில் மிகப்பெரிய ஹிட் ஆகும் என நான் நம்புகிறேன்" என்கிறார்.

வெள்ளக்கிழமை வெளியிடப்பட்ட இந்த பாடலின் டீசர் உடனடியாக வைரலானது. பிரீத்தம் இசையமைப்பில் பென்னி தயாள் மற்றும் அனுஷா மணி பாடியுள்ள இந்தப்பாடலில் சல்மான் கானும் கத்ரீனாவும் நம்பமுடியாத கெமிஸ்ட்ரியை வெளிப்படுத்தி உள்ளனர். இந்த பாடலில் இவர்கள் இருவருக்குமான அழகிய தோற்றத்தை பார்க்கும்போது இது இந்த பண்டிகை சீசனில் ஒரு பார்ட்டி ஆந்ததமாக நிச்சயமாக மாறும்.

மனீஷ் சர்மா இயக்கியுள்ள 'டைகர் 3' இந்த வருடம் நவம்பர்-12ஆம் தேதி ஞாயிறு தீபாவளியில் வெளியாகிறது.

# கலசலிங்கம் பல்கலையில், "இன்னோ ஸ்பார்க் கப்" ! தமிழ்நாடு கூடுதல் தலைமை செயலர் திறந்து வைத்தார்.!!



சென்னை, 24 அக்டோபர் 2023: ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலையில் வணிக நிர்வாகத்துறை சார்பில் "இன்னோ ஸ்பார்க் கப்" திறப்பு விழா துணைத் தலைவர் முனைவர் எஸ்.சசிஆனந்த் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு கூடுதல் தலைமை செயலர் தொழில் முனைவோர் மேம்பாட்டு இயக்குநர் சி.உமா சங்கர் ஐ.ஏ.எஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "இன்னோ ஸ்பார்க் ஹப்" தொழில் முனைவோர் கூடத்தை திறந்து வைத்து "தொழில் முனைவோரை வளர்ப்பதற்காக முன் முயற்சிகள் பற்றி விளக்கினார். மேலும் மாணவர்களின் "புதிய புராஜெக்ட் கண்காட்சியை" பார்வையிட்டு மாணவர்களின் புதுமையான திட்டங்கள் மற்றும் மாணவர்களால் துவக்கப்பட்டு நடத்தி வரும் புதிய தொழில் வணிகத்தையும் பார்வையிட்டு மாணவர்களிடம் கலந்துரையாடினார். துணைவேந்தர் எஸ்.நாராயணன்.பதிவாளர்.வி.வாசுதேவன்,டி.ஐ.ஆர் சரசு மற்றும் டீன் கணேசன் வாழத்துரை வழங்கினர்.

ஐ.இ.டி.சி இயக்குநர் ஜே.டெனி, துறைத்தலைவர் டி.சந்திரசேகர் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# இஸ்ரேலின் தாக்குதல் நடவடிக்கை அந்நாட்டுக்கே பின்னடைவை ஏற்படுத்தும் - ஒபாமா



சென்னை, 24 அக்டோபர் 2023: காசா மீது இஸ்ரேல் 18 வது நாளாக காசா தொடர் தாக்குதலை நடத்தி வரும் நிலையில், இது இஸ்ரேலுக்கே அந்நாட்டுக்கே பின்னடைவாக (பேக்ஃபயராக) மாறிவிடும் என அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா எச்சரித்துள்ளார்.

கடந்த 7ம் தேதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்தது. இந்த தாக்குதலில் சுமார் 1400 பேர் உயிரிழந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் கடந்த 17 நாட்களாக காசா மீது தாக்குதலை தொடுத்து வருகிறது. இந்த தாக்குதல் 18வது நாளாக இன்றும் நீடித்திருக்கிறது. இதுவரை காசா மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 2,000 குழந்தைகள் உட்பட 5,087 பேர் உயிரிழந்துள்ளனர். 15,273 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் உணவு, குடிநீர், மின்சாரமின்றி காசா மக்கள் தவித்து வருகின்றனர். காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் - அஹ்லி மருத்துவமனை மீது இஸ்ரேல் 4 நாட்களுக்கு முன்னர் நடத்திய தாக்தகுல் சர்வதேச அளவில் விவாதமாக வெடித்தது. சுமார் 22 நாடுகளில் இஸ்ரேலுக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களை நடத்தினர்.

இஸ்ரேலின் நடவடிக்கைக்கு ஆதரவாக அமெரிக்கா சில விஷயங்களை செய்தது. அமெரிக்கா தனது 'யுஎஸ்எஸ் ஜெரால்ட் ஆர் ஃபோர்ட்' எனும் போர்க்கப்பலை மத்திய தரைக்கடலில் காசாவுக்கு அருகே நிலை நிறுத்தியது. ஆனால் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பாலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அமெரிக்க வீதிகளில் மக்கள் இறங்கி பெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் போராட்டம் நடைபெற்றாலும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவான போராட்டத்தில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் மிகவும் அதிகம். எனவே பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதலை குறைக்க அமெரிக்கா அறிவுறுத்தியது.

இந்நிலையில் அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா சில விஷயங்களை கூறியுள்ளார். அதாவது, "நாம் பாலஸ்தீனத்தை நல்ல முறையில் அணுக முயற்சிக்கின்றோம். ஆனால் காசாவுக்கு குடிநீர், மின்சாரம் ஆகியவற்றை நிறுத்தி வைத்திருப்பது, பாலஸ்தீனம் உடனான அணுகுமுறையை மீண்டும் கடினமாக்கும். அதேபோல இது உங்களுக்கான சர்வதேச ஆதரவையும் பலவீனப்படுத்தும்.

மனித உயிரிழப்புகளை துச்சமென நினைக்கும் உங்கள் ராணுவத்தின் அணுகுமுறை, இந்த போரிலிருந்து உங்களை விரைவில் பின்வாங்க செய்துவிடும்" என இஸ்ரேலை எச்சரித்துள்ளார். தற்போதைய ஜோ பைடன் அரசு இஸ்ரேலுக்கு ஆதரவளித்துள்ள நிலையில், ஒபாமா இவ்வாறு கூறியிருப்பது விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர்: நிலைப்பாட்டை மாற்றிய சீனா



சென்னை, 24 அக்டோபர் 2023: ஹமாஸ் அமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது என முதன்முறையாக சீனா கூறியுள்ளது.

18வது நாளாக இஸ்ரேல் - ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையேயான மோதல் தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி தொலைபேசி மூலம் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சரை தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது அவர், ஒவ்வொரு நாட்டுக்கும், தன்னை பாதுகாத்து கொள்ள உரிமை உள்ளது.

ஆனால், சர்வதேச மனிதநேய சட்டத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டும். பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டும் என்று கூறினார். இதனால், ஹமாஸ் அமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது என முதன்முறையாக சீனா ஒப்பு கொண்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவை ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவித்து உள்ளன.

பாலஸ்தீன விவகாரத்தில் ஒரு விரிவான, நீண்டகால தீர்வை விரைந்து காண வேண்டும் என்றும் இதற்காக எகிப்து மற்றும் பிற அரபு நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட தயார் என்றும் கடந்த வாரம் சீன அதிபர் ஜின்பிங் கூறினார். உடனடி போர் நிறுத்தம் வேண்டும் என்றும் கூறினார்.

தொடக்கத்தில், ஹமாஸ் அமைப்பு மீது கண்டனம் எதுவும் தெரிவிக்காமல் சீனா ஒதுங்கி இருந்தது.

இதனால், இஸ்ரேலுக்கு உறுதுணையாக இருக்கும்படி சீனாவை, அமெரிக்கா கேட்டு கொண்டது.

இந்நிலையில், தொடர் மோதலால், அதிக எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்படுவது ஆழ்ந்த வருத்தம் அளிக்கிறது என சீன வெளியுறவு அமைச்சர் கூறினார்.

இந்த வாரம் அவர், அமெரிக்க பயணம் மேற்கொள்ள உள்ள சூழலில், இஸ்ரேல் விவகாரத்தில் தன்னுடைய நிலைப்பாட்டை சீனா மாற்றியுள்ளது.

சீன அதிபர் ஜின்பிங் அடுத்த மாதம் அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். அவருடைய இந்த பயணத்தில், அமெரிக்க அதிபர் ஜோ பிடனை சந்தித்து பேசுகிறார். இஸ்ரேல் போர் நடந்து வரும் சூழலில், இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒடிசா அரசில் கேபினெட் அமைச்சர் அந்தஸ்தில் தமிழர் வி.கே.பாண்டியன்



சென்னை, 24 அக்டோபர் 2023: ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் முன்னாள் தனிச் செயலாளரான வி.கே.பாண்டியனுக்கு விருப்ப ஓய்வு கோரிக்கை வந்த ஒரு நாள் கழித்து, மாநில அரசில் கேபினட் அமைச்சர் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வி.கார்த்திகேய பாண்டியன் (வயது 49), 2000 ஆம் ஆண்டு பிரிவு ஒடிசா கேடர் ஐஏஎஸ் அதிகாரியாக தேர்ச்சி பெற்றவர். 2002 ஆம் ஆண்டு அம்மாநிலத்தின் கலஹண்டி மாவட்டத்தில் துணை ஆட்சியராக நியமிக்கப்பட்டார். பின்னர் அங்கு பல்வேறு மாவட்டங்களில் ஆட்சியராக பணியாற்றியுள்ளார். கடந்த 2011ஆம் ஆண்டு முதல் முதலமைச்சர் நவீன் பட்நாயக்கின் தனிச் செயலாளராகவும், அவரது வலது கரமாகவும் இருந்து வருகிறார்.

ஒடிசா அரசாங்கத்திலும், ஆளும் கட்சியான பிஜு ஜனதா தள நிர்வாகிகள் மத்தியிலும் நவீன் பட்நாயக்குக்கு அடுத்த இடத்தில் மிகவும் செல்வாக்கு மிகுந்த நபராக கார்த்திகேய பாண்டியன் வலம் வருகிறார். அக்டோபர் 20ஆம் தேதி விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்திருந்த அவருக்கு, நேற்று (அக்டோபர் 23 ந்தேதி) ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நவீன் பட்நாயக் ஆலோசனையின் பேரிலேயே அவர் விருப்ப ஓய்வு பெற்றுள்ளதாகவும், விரைவில் அவர் முழு நேர அரசியலில் ஈடுபட உள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில், விஆர்எஸ் (விருப்ப ஓய்வு) எடுத்த ஒரு நாளிலேயே, ஒடிசா அரசில் கேபினட் அமைச்சர் பதவி வி.கே.பாண்டியனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஒடிசா மாநில கூடுதல் தலைமைச் செயலாளர் சுரேந்திர குமார் வெளியிட்டுள்ள அரசு உத்தரவில், 'மாற்றத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் 5டி திட்டம் மற்றும் நபின் ஒடிசாவின் தலைவராக வி.கே. பாண்டியன் நியமிக்கப்படுகிறார். இந்த பதவி, கேபினெட் அமைச்சருக்கு இணையான பதவி. இனி, இவர் முதல்வருக்குக் கீழ் நேரடியாக பணியாற்றுவார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஒடிசா சட்டமன்றத் தேர்தலிலும் அவர் களமிறங்கலாம் என்றும் பிஜு ஜனதா தளம் கட்சியில் அவருக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்படலாம் என்றும் பலரும் கருதுகின்றனர். அண்மையில் நவீன் பட்நாயக், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மற்றும் பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் ஆகியோரை சந்தித்த போது கூட மூன்றாவது நபராக பாண்டியன் மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது.

# 6.5 டன் மருந்துகள், 32 டன் பேரிடர் நிவாரண பொருட்கள்: பாலஸ்தீனத்துக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பிய இந்தியா



சென்னை, 24 அக்டோபர் 2023: போரினால் பாதிக்கப்பட்டுள்ள பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளான மருந்துகள், பேரிடர் நிவாரண பொருட்களை விமானம் மூலம் இந்திய ஒன்றிய அரசு அனுப்பியுள்ளது.

இஸ்ரேல் ஞ் பாலஸ்தீனம் இடையே போர் நடந்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளன. இஸ்ரேல் தரப்பில் 1300 பேர் உயிரிழந்துள்ள நிலையில், இஸ்ரேலின் பதில் தாக்குதலால் பாலஸ்தீனத்தில் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இதனிடையே, போரினால் பாதிக்கப்பட்டு பாலஸ்தீனர்கள் சிகிச்சை பெற்று வந்த காசா மருத்துவமனை மீதான தாக்குதலில் மட்டும் சுமார் 500 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக, பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர் நரேந்திர மோடி, மருத்துவமனை தாக்குதல் சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்ததுடன், தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார். பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து அனுப்புவோம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அதன்படி, போரினால் பாதிக்கப்பட்டுள்ள பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை ஒன்றிய அரசு அனுப்பியுள்ளது. இதுகுறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் அரிந்தம் பாக்ஸி தனது எக்ஸ் பக்கத்தில், 'பாலஸ்தீன மக்களுக்காக கிட்டத்தட்ட 6.5 டன் மருத்துவ உதவி மற்றும் 32 டன் பேரிடர் நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு ஐ ஏ எஃப் சி-17 விமானம் எகிப்தில் உள்ள எல்-அரிஷ் விமான நிலையத்திற்கு புறப்பட்டது.

அத்தியாவசிய உயிர்காக்கும் மருந்துகள், அறுவை சிகிச்சைப் பொருட்கள், கூடாரங்கள், தூங்கும் பைகள், தார்ப்பாய்கள், சுகாதாரப் பொருட்கள், தண்ணீர் சுத்திகரிப்பு மாத்திரைகள் போன்ற தேவையான பொருட்கள் இதில் அடங்கும் எனவும் பதிவிட்டுள்ளார்.

# மேலும் 2 பிணைக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ்



சென்னை, 24 அக்டோபர் 2023: சிறை பிடித்து வைத்துள்ள ஏராளமான இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டினரில் மேலும், 2 பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவித்துள்ளது.

கடந்த 7-ம் தேதி ஏராளமான இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டினரை ஹமாஸ் தீவிரவாதிகள் சிறைபிடித்து சென்றனர். இஸ்ரேல் மீது நடத்திய திடீர் தாக்குதலை தொடர்ந்து அவர்கள் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரால் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

பிணைக் கைதிகளில் சிலர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கான பேரை இஸ்ரேல் மீட்டது. இந்த நிலையில் மேலும் இரண்டு பிணைக் கைதிகளை விடுவித்து உள்ளது ஹமாஸ். இதனை செஞ்சிலுவை சங்கம் உறுதி செய்துள்ளது. கடந்த சனிக்கிழமை அன்று இரண்டு அமெரிக்க பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவித்தது.

மனிதாபிமான அடிப்படையில் வயது முதிர்ந்த இரண்டு இஸ்ரேலியர்களை ஹமாஸ் தற்போது விடுவித்துள்ளது. "உடல்நிலை சார்ந்த காரணங்களுக்காக வயது முதிர்ந்த இருவரை விடுவித்துள்ளோம்" என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

நூரிட் கூப்பர் (79), யோசெவ்ட் லிஃப்ஷிட்ஸ் (85) என இரண்டு பெண்களை ஹமாஸ் விடுவித்துள்ளது. அவர்கள் வீட்டில் இருந்தபோது ஹமாஸ் சிறை பிடித்தது. அவர்களது கணவர்களும் பிணைக் கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டனர். ஆனால், அவர்கள் இன்னும் ஹமாஸ் வசம் உள்ளனர். சுமார் 220-க்கும் மேற்பட்ட பிணைக் கைதிகள் ஹமாஸ் வசம் தற்போது இருப்பதாக தெரிகிறது.